செ.வெ.எண்: 19 நாள்:06.08.2016

**புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மாற்றுதிறனாளிகளுக்கு ரூ.12,46,727 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.**

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுதிறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் இன்று 06.08.2016 வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாற்றுதிறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் வழங்கி பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் தமிழக அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பட்டம் மற்றும் பட்டயம் முடித்த 10 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.50,000 வீதம் ரூ.5.லட்சம் மதிப்பில் திருமண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 40 கிராம் தங்கமும், 16 பிற மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.25,000 வீதம் ரூ.4.லட்சம் மதிப்பில் திருமண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 64 கிராம் தங்கமும், என மொத்தம் 26 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9.லட்சம் மதிப்பில் திருமண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 104 கிராம் தங்கமும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 48 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,46,727 மதிப்பில் பல்வேறு உதவி உபகரணங்களும் என மொத்தம் 74 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12,46,727 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 வது முறையாக தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வரும் தாலிக்கு 4 கிராம் தங்கத்தை 8 கிராம் தங்கமாக உயர்த்தி வழங்க ஆணையிட்டுள்ளார்கள். மேலும் மாற்றுதிறனாளிகள் சமுதாயத்தில் உயர்ந்த நிலையை அடையும் வகையில் தமிழக அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. எனவே மாற்றுத்திறனாளிகள் தமிழக அரசின் நலத்திட்ட உதவிகளை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்டரங்கில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுதிறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் ஆகியோர் இன்று 05.08.2016 வழங்கினார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாற்றுதிறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படையில் விராலிமலை சட்டமன்ற தொகுதியில் உள்ள 4 மாற்றுத்திறனாளிகளுக்கு விராலிமலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.81,800 மதிப்பில் நவீன செயற்கை கால்களும், 9 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.39,197 மதிப்பில் செயற்கை கால்களும், 13 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.41,750 மதிப்பில் காலிப்பர் உபகரணங்களும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9,600 மதிப்பில் காதுக்கு பின்னால் அணியும் காதொலிக்கருவிகளும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,360 மதிப்பில் காதொலிக்கருவி மற்றும் மறுசக்தி பெறும் மின்கலன்களும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.10,640 மதிப்பில் மடக்கு சக்கர நாற்காலிகளும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை நிதியின் கீழ் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.10,000 மதிப்பில் மேக்னியபர் உபகரணமும், மாற்றுத்திறனாளிகள் நலவாரியம் நிதியின் கீழ் 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.1 லட்சம் மதிப்பில் விபத்து மரண நிதியுதவித் தொகைக்கான காசோலையும், 26 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.9.லட்சம் மதிப்பில் திருமண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், தாலிக்கு தலா 4 கிராம் தங்கம் வீதம் 104 கிராம் தங்கமும் என மொத்தம் 74 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.12,46,727 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழக அரசு மாற்றுதிறனாளிகள் வாழ்வினை முன்னேற்றும் வகையில் வேலை வாய்ப்பில் மாற்றுத்திறனாளிக்கு 3 சதவிகிதம் இட ஒதுக்கீடு செய்துள்ளது. மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை பெறுவதற்கு மாற்றுதிறனாளிக்கான 60 சதவிகிதத்திலிருந்து 40 சதவிகிதமாக உடல் ஊனத்தின் விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகளுக்கு நடப்பு நிதியாண்டில் ஆயிரம் 3 சக்கர ஸ்கூட்டர்கள் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. எனவே மாற்றுத்திறனாளிகள் தமிழக அரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட மாற்றுதிறனாளிகள் நல அலுவலர் திரு.பி.சரவணக்குமார், இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல் பிரபு, மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, ஒன்றியக்குழுத்தலைவர் திருமதி.இளவரசிவசந்தன், நகர்மன்றத் தலைவர் திரு.இரா. ராஜசேகரன், ஆத்மா குழுத்தலைவர்

திரு.சாம்பசிவம், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, இலுப்பூர் பேரூராட்சித் தலைவர் திரு.குருபாபு, அன்னவாசல் பேரூராட்சித் துணைத் தலைவர் திரு.பழனிச்சாமி, இளநிலை மறுவாழ்வு அலுவலர் திரு.வசந்தராமகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.பாஸ்கர் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**